RARY
EC 2016
ERSITY, SRI LAN

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## கலை கலாசார பீடம்

## மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

## 2013/2014 (May/June 2016)

## GYS 3123 Population Geography

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

---

1. அ. இலங்கையின் குடிக்கணிப்பு வரலாற்றினை ஆண்டுகளினடிப்படையில் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

   ஆ. குடித்தொகை தரவு மூலங்களில் வாழ்நிலை புள்ளிவிபரவியல் முறை (Vital Statistical Method) எந்தளவுக்கு முக்கியத்துவமானது என்பதை விளக்குக. (06 புள்ளிகள்)

   இ. இறுதியாக மேற்கொள்ளப்பட்ட குடித்தொகை கணிப்பீட்டின் படி இலங்கையின் குடித்தொகை வளர்ச்சி மற்றும் மாகாண மாவட்ட அடிப்படையில் குடித்தொகைப் பரம்பல், அவற்றிற்கு இடையேயான வேறுபாடு என்பவை பற்றி தரவுகளின் துணையுடன் விளக்குக. (14 புள்ளிகள்)

2. அ. கஸ்ரோவின் (Casto) குடித்தொகை கோட்பாட்டில் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்கள் எந்தளவுக்கு ஏற்றுக்கொள்ளப்படக்கூடியவை என்பது தொடர்பாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

   ஆ. தோமஸ் மால்தூஸ் (Thomas Malthus) என்பவரின் குடித்தொகைக் கோட்பாடு உள்ளடக்கும் விடயங்கள் தற்காலத்தில் எந்தளவுக்கு பொருத்தமானது என்பது தொடர்பாக ஆராய்க. (17 புள்ளிகள்)

3. அ. கருவளம், கருச்செழிப்பு என்ற பதங்களை வேறுபடுத்துக. (05 புள்ளிகள்)

   ஆ. கருவளத்தினை தீர்மானிக்கும் நேரடியான, மறைமுகமான காரணிகளைக் குறிப்பிட்டு, அவை ஒவ்வொன்றிலுமிருந்து ஒவ்வொரு காரணியைத் தெரிவு செய்து விளக்குக. (20 புள்ளிகள்)

4. அ. இடப்பெயர்வின் வகைகள் யாவை? (05 புள்ளிகள்)

ஆ. இடப்பெயர்வினைத் தூண்டுகின்ற காரணிகள் யாவை? (05 புள்ளிகள்)

இ. அண்மைக் காலமாக இலங்கையில் ஏற்பட்டு வந்த உள்நாட்டு இடப்பெயர்வு பாங்குகளை பொருத்தமான உதாரணங்களுடன் ஆராய்க.

(15 புள்ளிகள்)

5. "சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலப்பகுதியிலிருந்து இலங்கையில் இறப்பு வீதத்தி படிப்படியான வீழ்ச்சி ஏற்பட்டு வந்துள்ளது." இதற்கான காரணிகளை பொருத்தமா உதாரணங்களுடன் ஆராய்க. (25 புள்ளிகள்)

6. "குடித்தொகை தொடர்பாக நாடுகளிடையே முன்வைக்கப்படும் கொள்கைகள் அந்நாடுகளின் குடித்தொகை மீது தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன" என்ற கருத்தினை ஏற்றுக் கொள்கின்றீரா? உதாரணங்களுடன் ஆராய்க.

(25 புள்ளிகள்)